**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 143/2015**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | DW.2 |
| NAME | சுகுணா (ஏ) சுகுமார் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 07.07.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. தாவா சொத்தில் விவசாயம் செய்வதாக சொல்லி உள்ள நிலையில் அதற்கு ஆதரவாக குத்தகை ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் விவசாயம் தொழில் செய்கிறேன். எனக்கு சொந்தமாக 1 ஏக்கரா விவசாய நிலம் உள்ளது. எனது அம்மா பெயர் ஜீவமணியம்மாள் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கிற்காக ஜீவமணியம்மாளுக்கு ஜெயலட்சுமி வாய்மொழி மூலமாக குத்தகைக்கு விட்டார் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அப்பிலிசின்னநாயுடு யார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.4 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் உள்ள பெறுநர் முகவரி வேறு மையினால் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

3. பி.சா.ஆ.4 ஆவணத்தில் எந்த சொத்திற்காக அறிவிப்பு அனுப்பட்டது என குறிப்பிடப்படவில்லை என்றால் அந்த நிலத்திற்கு அனுப்பிய அறிவிப்புதான். உண்மையான அறிவிப்பு இல்லை என்றாலும் தாவா சொத்திற்கு அனுப்பட்டது இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 அறிவிப்பிற்கு பதில் அனுப்பி உள்ளோமா என்றால் அனுப்பி உள்ளோம். அந்த பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

4. சண்முகம் இந்த நிலத்தின் உரிமையாளரா என்றால் இல்லை. அவருககும் இந்த நிலத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

அதனால் பி.சா.ஆ.5 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எந்த குத்தகையும் எனக்கும் என் தயாருக்கும் மற்றவர்களுக்கும் விடப்படவில்லை என்றாலும் அதனால் தான் அனைத்து குத்தகையும் வாய்மொழியாக விடப்பட்டது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல என் அப்பா காலத்தில் இருந்து அப்படி தான் விடப்பட்டது. வாதி தனசேகர் தான் சொத்தை அனுபவித்து வருகிறார் என்றாலும் அவரிடம்இருந்து சொத்தை அபகரிக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Date: 2026.07.07 18:58:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.